

# டாக்டர். சுரேஷ்

## கேளா ஒலியின் முன்னோடி




'உனக்கும் உனக்கும் நிகழும் போராட்டமே வெற்றி'. தன் உள்ளத்தை தானே நுணுகிக் கண்டு, தாம் செய்யும் செயல்களை தாமே விமர்சிப்பதன் மூலம் வெற்றிக்காக போராடுபவர்களின் தாரக மந்திரம் இதுவாகவே இருக்க வேண்டும் என்று உறுதியாக நம்புகிறார் டாக்டர்.சுரேஷ்.

மருத்துவ மேல் படிப்புக்கான கனவு, 'ஒதுக்கீட்டு முறை'யால் (Reservation policy) சிதைந்து போனதால், 'கேளா ஒலி மையம்' (Ultrasound centre) ஒன்றைத் திறக்க முடிவு செய்த்திலிருந்து தொடங்கியது இவரது பயணம். கேளா ஒலியின் பலவித பயன்களும், விரைவாக முடிவெடுப்பதற்கு இது ஒரு நல்ல சாதனமாக இருப்பதும், ஆராய்ச்சியில் புலப்பட்டன. கர்ப்பமாய் இருக்கும் பெண்கள், தங்கள் வயிற்றில் இருக்கும் குழந்தையின் வளர்ச்சியைக் காண வேறு ஒரு மாறுமையும் இல்லாத அந்தக் காலத்தில், கேளா ஒலியின் வருகை ஒரு வரப்ரசாதமாக இருந்தது. இந்த 'நிகழ் -வரைவு' (Imaging) இந்தியாவில் தொழில் நுட்பம் வளர்ந்து வருவதை எல்லோருக்கும் உணர்த்தியது.

புதிய தொழில் நுட்பமும், சிகிச்சைமுறையும் கிடைத்ததால், டாக்டர்.சுரேஷ், ,நிழற்படங்களையும் (Images), நோயறிகை (Diagnosis) முறையினையும் பதிவு செய்ய முடிவு செய்தார்.

சென்னையில் உள்ள பிற டாக்டர்களின் ஆலோசனைக்கான பின்னூட்டு முறையையும் (Feedback system) வகுத்தார். இதனால், 'மெடிஸ்கானின்' நுணுக்கமுறை பண்பட்டதோடு மட்டுமன்றி, வயிற்றில் வளர்ந்து வரும் குழந்தையின் வளர்ச்சியையும் புரிந்து கொள்ள முடிந்தது; கர்ப்பம் தரிக்கும் காலத்தில் எடுக்கப்படும் முடிவுகளும் சுலபமாயின. வாழ்க்கைத்தரமும் உயர்ந்து, இப்பொழுது 'கேளா ஒளி மையம்' கர்ப்ப காலத்தில் ஒரு இன்றையமையா சாதனமாக ஆகி விட்டது.

1984ஆம் வருடம், டாக்டர்.சுரேஷ், 18 வார கரு ஒன்றிற்கு 'ஹைட்ரோசிஃபாலஸ்' (Hydrocyphalus- மூளைக்குள் நீர்) நோய் இருப்பதைக் கண்டுபிடித்தார்.அந்தக் கரு கலைக்கப்பட்டாலும், இன்னொரு மருத்துவர், குழந்தை ஆரோக்கியமாகவே இருந்ததாகத் தான் கருதுவதாகக் கூறவே, ஆத்திரமடைந்தனர் அந்த பெற்றோர். கருவை மீண்டும் அவர்கள் முன்னிலையில் பரிசோதித்து அதற்கு மூளையில் இருந்த ப்ரச்சனையை கண்கூடாக நிரூபித்தார் டாக்டர்.சுரேஷ். இந்த நிகழ்விற்குப் பிறகு, 'மெடிஸ்கானில்' 'பேறுக் கால நோய்க் கூற்றியல்' (Perinatal pathology) பிரிவு தொடங்கப்பட்டு, அவர்களது 'மனசாட்சியின் திறவு காப்பாக' விளங்குகிறது.

நோயறிகையும் (Diagnosis) 'வரைவியும்' (Imaging) மட்டுமே எல்லா நோயாளிகளுக்கும் உதவவில்லை. ஒருமுறை அங்கு வந்த ஒரு குழந்தை நோயாளிக்கு சிறு நீரக அடைப்பு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.எனினும், அதுபோன்ற ஒரு நிகழ்வுக்கூறு அதுவரை அங்கு கண்டதில்லை. இதுவே, மெடிஸ்கானில் ஒவ்வொரு நோயின் வேர்மூலத்தையும், வரலாற்றையும்,சிகிச்சை முறைகளையும் கண்டுபிடித்துத் தீர்வு காணும் 'மதிவளத்துணை பிரிவு' (Counselling unit) அமைய வழி வகுத்தது. தனித்தன்மை வாய்ந்த இந்தப் பிரிவில், வியாதியைப் பல கோணங்களில் ஆராயும் குழு, நோயாளிகளுக்கு அது பற்றிய விவரங்களைக் கூறி தக்க ஆலோசனையும் வழங்குகிறது. இது ஒரு 'மரபியல் ஆய்வுக்கூடமாக' (Genetics lab) வளர்ந்து, 'உயிர் அணுகோல் இயல்பு கடந்தமை' (Chromosomal abnormalities) களைப் பற்றி நுண்ணறிவு அளித்து, 12-13 வாரம் இருக்கும்பொழுதே கருவின் முரண்பாடுகளைக் கண்டுபிடிக்கும் அளவிற்கு முன்னேறியிருக்கிறது. கருவில் இருக்கும்பொழுது 'கருப்பை இரத்தம் ஏற்றுதல்' (Intra-uterine blood transfusion) நடத்தப்பட்டு, இதனால் சுமார் 300 குழந்தைகளின் உயிர்களும் காப்பாற்றப்பட்டிருக்கின்றன. இரட்டையர்கள் மிகச் சிக்கலான நிலையில் வயிற்றில் இருக்கும்பொழுது, கருப்பையில் அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நிகழ்த்தப்பட்டிருக்கிறது. சுமார் 200 இரட்டையர்கள் இதனால் உயிர் பிழைத்திருக்கிறார்கள். நாளடைவில், அசாதாரணமான 'கர்ப்ப சிசு' (Foetal medicine) சிகிச்சை மெடிஸ்கானில் வளர்ந்தது இது போலத்தான்.


கர்ப்ப சிசு இயல்பு கடந்தமையைக் கண்டுபிடிக்கும் காலம், 20 வாரங்களிலிருந்து, 12-13 வாரங்களாகக் குறைந்தது மெடிஸ்கானின் பெரிய சாதனையாகும். சுமார் 68 சதவிகித இயல்பு கடந்தமை இந்த நிலையில் கண்டறியப்படுகிறது. இதயம், நான்கு அறைகளும் (Chambers) அடைப்பிதழ்களும் (Valves) கொண்டு ஒரு சென்டிமீட்டர் அளவில் மட்டுமே இருக்கும் இதயக் கோளாறுகள், இதில் 45 சதவிகிதம்! கரு நன்கு வளர்ந்தபிறகு கூடவே வரும் பந்த பாச உணர்வினால் தீர்மானமான முடிவுகள் எடுக்கத் தயங்குவதை விட, கரு நன்கு வளர்வதற்கு முன்பான நிலையில் விருப்பேற்புகள் நிறைய இருப்பதும், தீர்மானமான முடிவுகள் எடுப்பது எளிது என்பது*M* உண்மையல்லவா?

"ஒரு நாளைக்கு சுமார் 7 - 8 முரண்பாடான, இயல்பு



கடந்த நிகழ்வுகளை(நோயாளிகளை)ப் பார்க்கிறோம்.ஒவ்வொரு நாளும் புதிய சவால், புதிய பொறுப்பு. எங்களது ஆரய்ச்சியின் கண்டுபிடிப்புகளை ஏற்கெனவே இருக்கும் தகவல்களோடு சேர்க்கிறோம். இதிலிருந்து பிறந்தது, ப்ரத்தியேகமாக ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் 'இரட்டையர் பிரிவு'" என்கிறார் டாக்டர். சுரேஷ்.

லாப நோக்கு இல்லாத 'கர்ப்ப சிசு காக்கும் ஆராய்ச்சி நிறுவனம்' (Foetal care research foundation), கர்ப்ப சிசு கோளாறுகளைத் தடுப்பதற்காகவும், சிசுக்களைப் பாதுகாப்பதற்காகவும், கோளாறு இருந்தால் சிகிச்சை அளிப்பதற்காகவும் தொடங்கப்பட்டது. பிறப்புக் கோளாறுகள் நிறையவே கண்டுபிடிக்கப்பட்டு வந்ததால், பரிசோதனைகள் பல செய்து, சிகிச்சை அளிப்பதற்கான தேவையும் அதிகமானது. நோயாளிகளுக்கு நிதி உதவி செய்ய, பல உபயதாரர்களுடனும், நிறுவனங்களுடனும், மெடிஸ்கான் இணைந்துள்ளது. மிக அரிதான நோய்களுக்கான ப்ரத்தியேகக் குழு ஒன்றைத் தொடங்குவதற்கு இது வழி வகுத்தது. சுமார் 400 குழந்தைகள் இதன் மூலம் பயன் பெறுகிறார்கள்.டாக்டர்.சுஜாதாவின் முயற்சிகளால், அக்குழந்தைகளுக்கு மாதாமாதம் மாற்ற வேண்டிய நொதி (Enzyme) இந்திய மருத்துவ ஆலோசனை குழு (Indian medical advisory board) மூலம் இலவசமாகக் கிடைக்கப்பெறுகிறது. மிக அரிதான நோய்களால் பாதிக்கப்பட்ட





சிசுக்களுக்கு விரிவான வகையில் சிகிச்சை அளிக்கும் 'சென்டர் ஆஃப் எக்ஸலென்ஸ் ஃபார் ரேர் டிஸ்ஆர்டர்ஸ்' (Centre for excellence for rare disorders), சென்னை வி.ஹெச்.எஸ்ஸோடு கூட்டு சேர்ந்து தொடங்கப்பட்டது. மன வளர்ச்சி குன்றுவதைத் தடுப்பதற்காக, அரசாங்க மருத்துவமனைகளில் சுமார் 35,000 பிறந்த குழந்தைகளை பரிசோதித்திருக்கிறது இந்த மையம். நோயை முன் கூட்டியே கண்டுபிடித்து, சிகிச்சை அளித்து, உயிர் காக்கும் பணியினை இந்த மையம் செய்து வருகிறது.

கிராமப்புறங்களிலும் 'கேளா ஒலி' பரவும் முகமாக, அங்கு முகாம்களை நடத்தி அங்குள்ள மருத்துவர்களுக்குப் பயிற்சி அளித்து வருகிறது மெடிஸ்கான். இதனால், கிராமப்புற மக்கள் நகரத்திற்குப் பரிசோதனைக்காக வருவதற்கான போக்குவரத்து செலவு தவிர்க்கப்படுவதோடு, பயனுறுதித்தன்மை வாய்ந்த சிகிச்சையும் அளிக்கப்படுகிறது.

மேம்பாடு மிகுந்த மையங்களை (Centres of excellence) அரசு மருத்துவமனைகளில் அமைக்கும் முகமாக 176 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு (Primary health centres) ஒரு திட்டம் வகுக்கப்பட்டு, அதன் மூலம் ஒரு மாவட்டத்திற்கு 2 மருத்துவர்களுக்குப் பயிற்சி அளிப்பது என முடிவு செய்யப்பட்டது. "ஒரு வருடத்திற்கு அவர்கள் எடுத்த வரைவிகளை ஆய்ந்து பார்த்து, அவற்றிலுள்ள இயல்பு கடந்த நிகழ்வுகளை (நோய்களை) ஆரம்ப சுகாதார நிலையங்களிலுள்ள மருத்துவர்களைக் கண்டுபிடிக்க வைத்தோம். தமிழ் நாட்டில் மட்டுமே நிகழ்ந்த இந்த பரிசோதனையினால், உள்ளூர் மற்றும் வெளியூர்களில் நடத்த வேண்டிய சிகிச்சை முறை பற்றிய தெளிந்த முடிவுகள் எடுக்கப்பட்டன. அரசாங்க மருத்துவமனைகளில் இலவச 'ஊடு கதிர்ப்படம்' (Scan) சேவையினை மெடிஸ்கான் வழங்கி வருகிறது.இது வரை சுமார் 1.2 லட்சம் இலவச ஊடு கதிர்ப்படங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன", என்கிறார் டாக்டர்.சுரேஷ்.

நவீனமான பல முறைகளை தொடக்க காலத்திலிருந்தே மெடிஸ்கான் அறிமுகப்படுத்தியிருக்கிறது. "இந்தியாவிலுள்ள மருத்துவர்களுக்கான முதலாவது பயிற்சி முகாம், 1984 இலேயே நடத்தப்பட்டது. இன்றுவரை ,ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட மருத்துவர்களுக்குப் பயிற்சியளித்திருக்கிறது மெடிஸ்கான்" என்று கூறும் டாக்டர்.சுரேஷ், பயிற்சிக்கல்விக்கும், தரத்திற்கும், சீர்மைக்கும் மிகவும் முக்கியத்துவம் அளிக்கிறார்.மெடிஸ்கான், இரண்டு நிறுவனங்களுடன் உடனுழைப்பு வைத்திருக்கிறது. ஒன்று, உயர்தர மரபணு பரிசோதனை (High quality genetic testing) க்காக 'பெர்கின் எல்மர்' *(PerkinElmer)* உடன்(விலை குறைப்புக்காக) ; மற்றொன்று 'இன்டர்நாஷனல் ஸொசைட்டி ஆஃப் அல்ட்ராசவுண்ட் அண்ட் ஆப்ஸ்டட்ரிக்ஸ் அண்ட் கைனகாலஜி'யுடன் (International soceity of ultrasound and obstetrics and gynaecology). இந்த இரு நிறுவனங்களின் இந்தியப் பிரதி நிதியாகச் செயல்படும் டாக்டர்.சுரேஷ், முது நிலைக் கல்வி நிலையிலேயே (Pg level) பயிற்சி அளிக்கவும், பயிற்சிக்கான பாடங்களை வகுக்கவும் செய்கிறார்.

"பயனில் நிலையில் எங்கள் இயந்திரங்கள் இருந்த பொழுதும், எங்களுக்கு நேரம் இருந்த பொழுதும், எங்களால், ஏழை மக்களுக்கு இலவச சேவை அளிக்க முடிந்தது. அறிவும், மிகப்பெரும் திருப்தியும் எனக்குக் கிட்டியதால், அவர்கள் எல்லோருக்கும் நான் பெருங்கடமைப் பட்டிருக்கிறேன். 'கர்ப்பப்பை இரத்த ஏற்றுதல்' நிகழ்த்தப்பட்ட முதல் சில சிசுக்களில் ஒன்றான ஒரு சிசு இப்பொழுது ஒரு பட்டதாரி. அந்தக் குடும்பம், ஒவ்வொரு வருடமும் அவரது பிறந்த நாளைக் கொண்டாட இங்கு வருவார்கள். நாட்டிற்கு ஒரு நல்லதொரு குடிமகனை நாங்கள் அளித்திருக்கிறோம்", என்று பெருமையுடன் கூறுகிறார் டாக்டர்.சுரேஷ்.

அன்றாடம் நோயாளிகளைக் கண்ட, பொதுவான மருத்துவம் செய்த அந்த நாட்களை சில சமயங்களில் ஏக்கத்துடன் நினைத்துப் பார்த்தாலும், இன்று காலம் வெகுவாக மாறி விட்டதையும், எதிபார்ப்புகள் அதிகமாகி விட்டதையும் நினைத்து சிறிது மனம் வருந்துகிறார் டாக்டர்.சுரேஷ். தகவல்கள் எங்கும் இரைந்து கிடைக்கும் இந்த 'கூகுல் யுகத்தில்' எல்லாவற்றையும் உள்வாங்கி, நோயாளிக்கேற்ற சிகிச்சை முறையை, ஒரு மருத்துவர் செய்ய வேண்டியதின் அவசியத்தைப் பற்றிக் கூறுகிறார்.

கடந்த 36 வருடங்களாக இருக்கிறது மெடிஸ்கானின் உள் மையக் குழு. பொறுப்புகளை ஒன்றாகப் பகிர்ந்து, ஒருவரோடுருவர் கருத்துப் பரிமாற்றம் நிகழ்த்தி, ஒன்றாகப் பணி புரிகிறது இந்தக் குழு. ஒரே சமயத்தில், ஒரே நிகழ்வில், எப்பொழுதுமே 4 மருத்துவர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதால், உள்வாங்குதல் எளிதாகிறது. "நாம் செய்யும் ஒவ்வொரு செயலையும் மகிழ்வுடன் நுகர்ந்தால், எதுவுமே மனத்திற்கு பாரமோ அழுத்தமோ இல்லை. நல்ல பணியும், சேவையும் செய்தால், கதவுகள் என்றுமே திறக்கும்" என்று நம்பிக்கையோடு கூறுகிறார் டாக்டர்.சுரேஷ்.

மெடிஸ்கான் வெறும் 'ஊது கதிர்ப் பட மையம்' மட்டுமே அல்ல. பலருக்கும், தமது நோய்களுக்கான தீர்வை அளிக்கும் ஒரு நம்பிக்கை மையம். டாக்டர்.சுரேஷும் அவரது குழுவும், அந்த நம்பிக்கைக் கீற்றை அவர்களுக்குக் காட்டுகிறார்கள், அளிக்கிறார்கள். டாக்டர்.சுரேஷ்- சென்னையின் முதன்மை சான்ற வெற்றி வீரர்!